## சுருக்கம்

பணியமைப்பு – வேளாண்மை-உழவர் நலத் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.உ.கௌதமன் என்பவரின் பணியினை 24.02.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## வேளாண்மை – உழவர் நலத் (வேநி9) துறை

அரசாணை (3டி) எண்.42

நாள்:28.04.2022
சுபகிருது வருடம்
சித்திரை திங்கள் 15,
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண் அநிபி8 / 136332 / 2021, நாள் 18.03.2022.

*****

**ஆணை:**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், சென்னை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் கட்டுப்பாட்டில், கடலூர் வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) அலுவலகத்தில் உதவி வேளாண்மை அலுவலராகப் பணிபுரிந்து வந்தபோது 10.05.2014 அன்று பணிக்காலத்தில் மரணமடைந்த (லேட்) ஆர். உதயபாஸ்கர் அவர்களின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது வாரிசு / மகன் திரு உ.கௌதமன் என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களை பரிசீலித்து ஆணையிடப்பட்ட வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண் அநிபி6 / 103874 / 2019, நாள் 12.02.2021-ன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் (பிணையம்) பணி நியமனம் செய்து, தனியருக்கு உரிய பணியிட ஆணை வழங்கும் பொருட்டு விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதென்றும், அவ்வாறே, விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண் அ2 / 2046 / 2021, நாள் 19.02.2021-ன்படி, தனியர், விழுப்புரம், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டிலுள்ள விக்கிரவாண்டி, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தின் கீழ் எண்ணாயிரம், துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில் இளநிலை உதவியாளராகப் (பிணையம்) 24.02.2021 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளதோடு, தனியரின் பணியினை 24.02.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

Scanned with OKEN Scanner